குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு.S.பாக்கியராஜ், பி.எஸ்சி, பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்.
ஆண்டுபட்டிகை வழக்கு எண்.1018/2022

**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 03-ம் நாள் புதன்கிழமை**

**CNR.No.TNDG03-026383-2022**

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
தாலுகா காவல்நிலையம்,
திண்டுக்கல்.
குற்ற எண். 560/2021 ......குற்றமுறையிடுபவர்

//எதிராக//

சுப்பையா
த/பெ. கந்தசாமி,
சேலநாக்கரையான்பட்டி,
தருமத்துப்பட்டி போஸ்ட்,
திண்டுக்கல்

**Case – Summary**

| S.No | Description | Details |
|---|---|---|
| 1. | The Date of remand of the accused | 19.05.2021 |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 21.06.2022 |
| 3. | The date of committal of the case to the court of sessions | Not applicable. |
| 4. | The date of questioning of the accused under sections 228,240, 246 and 251 of the code of Criminal procedure, 1973 as the case may be | 04.11.2024 (S.251Crpc) |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | superior Courts; except routine petitions like petitions under section 317 of the code | | | |
| 6. | The date of examination – in chief and cross-examination of a witness | Witnesses | Examined in – Chief | Examined - in Cross |
| | | PW1 | 04.03.2025 | 04.03.2025 |
| | | PW2 | 04.03.2025 | 04.03.2025 |
| | | PW3 | 04.03.2025 | 04.03.2025 |
| | | PW4 | 04.03.2025 | 04.03.2025 |
| | | PW5 | 18.03.2025 | 18.03.2025 |
| | | PW6 | 18.03.2025 | 18.03.2025 |
| | | PW7 | 23.05.2025 | 23.05.2025 |
| | | PW8 | 16.03.2026 | 16.03.2026 |
| 7. | The date of examination of the accused under section 313 of the code | 30.03.2026 | | |
| 8. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | - | | |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | - | | |

இவ்வழக்கு 21.06.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி பொது வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. சதீஸ் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய வழக்கில் இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இன்று வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

கடந்த 17.05.2021 ம் தேதி பித்தளைப்பட்டி புங்காரத்தெரு மெயின் ரோட்டில் புகார்தாரர் கிருஷ்ணன் வீட்டுக்கு எதிரே தெற்கு பக்கம் விளையாடிக்கொண்டிருந்த கிருஷ்ணனின் 2 வயது பேரன் சந்தோஷ் என்பவரை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையை கடந்து சென்று தூக்கி வருவதற்காக புகார்தாரரின் மனைவி சித்ரா ரோட்டின் வடக்கு பக்கம் இரவு 08.40 மணிக்கு நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் மேற்கேயிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 57 BC 9765 Bolero Pickup Van – யை அதன் ஓட்டுநரான சுப்பையா என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து சித்ரா மீது மோதியதால் ஏற்பட்ட வாகன விபத்தில் சித்ராவுக்கு தலை மற்றும் உடலில் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே சித்ரா மரணமடைய காரணமான எதிரி சுப்பையாவின் மீது பிரிவு 279, 304(A) இ.த.ச.– ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் வழங்கப்பட்டது. எதிரிமீது பிரிவு 279, 304(A) இ.த.ச. ன் கீழான குற்றம் பற்றி விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி மறுத்து குற்றவாளி இல்லை என்று கூறினார்.

3. எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சார்த்தை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்.**

அ) அ.சா.1 மணிகண்டனின் தந்தை கிருஷ்ணன் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். புகார்தாரர் தற்போது இறந்துவிட்டார். 17.05.2021ம் தேதி இரவு 8.40 க்கு அ.சா.1 தனது வீட்டின் முன்பாக அ.சா.1ம், அவரது அம்மா சித்ரா, அவரது அப்பா கிருஷ்ணன், மற்றும் அவரது மனைவி ரூபாதேவி, நண்பர் யோகராஜ் ஆகியோர்கள் தனது வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்த சமயத்தில் அ.சா.1ன் மகன் ரோட்டிற்கு தெற்கு திசையில் நின்று விளையாடிக் கொண்டிருந்துள்ளார். தனது மகனை தூக்க செல்வதற்காக தனது அம்மா ரோட்டின் வடக்கு பக்கமாக நின்று இரண்டு திசையிலும் வாகனம் ஏதும் வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்த போது அப்பொழுது TN 57 9657 என்ற பொலிரோ பிக்கப் வண்டி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓவர் ஸ்பீடில் ஹாரன் அடிக்காமல், ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த தனது அம்மா மீது மோதி, தனது அம்மாவை 10 அடி துாரம் இழுத்துச் சென்றது. அதில் தனது அம்மாவின் தலை பிக்கப் வண்டியின் பின்பக்கம் உள்ள இடது பக்க டயரில்

சிக்கிவிட்டது. எதிரி வண்டியை நிறுத்திவிட்டார். அ.சா.1ன் அம்மா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்.

ஆ) சார்பு ஆய்வாளர் ஜெய் கணேஷ் அ.சா.7 கடந்த 17.05.2021ம் தேதி இரவு 22.30 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருக்கும் போது திண்டுக்கல் பித்தளைப்பட்டியை சேர்ந்த அழகுமலைப்பிள்ளை அவரின் மகன் கிருஷ்ணன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப திண்டுக்கல் தாலுகா குற்ற எண் 560/2021 பிரிவு 279,304(A) இ.த.ச. படி வழக்கு பதிவு செய்தார். வாதியின் புகார் மனு அசலையும் , இணைத்து நீதிமன்றத்திற்கும் மற்ற நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கும் காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார் இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரிக்க வழக்கு பதிவு செய்த விவரத்தை கூறினார்.

இ) ஆய்வாளர் திரு. பார்த்திபன் அ.சா.8 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். கடந்த 17.05.2021 தேதி திண்டுக்கல் தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் பொறுப்பு அலுவலில் இருந்த போது சார்ப்பு ஆய்வளர் திரு.ஜெய்கனேஷ் அவர்களால் பதிவு செய்யப்பட்டிருந்த நிலைய குற்ற எண்.560/2021 U/s.279, 304(A) of IPC வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 18.05.2021 தேதி அதிகாலை 00.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான திண்டுக்கல் பித்தளைப்பட்டி புங்கமரத்தெரு மெயின் ரோடு சென்று சாட்சிகள் மயில்சாமி மற்றும்

லட்சுமணமணிகண்டன் ஆகிய இருவரின் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். சாட்சிகள் கிருஷ்ணன் மணிகன்டன், ஜீவாநந்தம், யோகராஜன், மயில்சாமி, லட்சுமனமணிகன்டன் ஆகிய சாட்சிகளை விசாரனைசெய்து மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தார். அதே தேதியில் திண்டுக்கல் அரசு மருத்துவமணை சவக்கிடங்கு சென்றும் இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்து போன சித்ரா என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரனையில் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 6 மணி முதல் 7.30 மணிவரை பிரேத விசாரனை மேற்கொண்டார். இந்த இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பெண் முதல் நிலைக் காவலர் 657 திருமதி . தங்கப்பாண்டி என்பவர் மூலம் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தினை கொடுத்து அனுப்பி, அதே தேதியில் பெண் முதல் நிலைக் காவலர் 657 திருமதி . தங்கப்பாண்டி மற்றும் சார்பு ஆய்வளர் ஜெய்கனேஷ் ஆகியோர்களை விசாரனை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் 19.05.2021 தேதி 12.30 மணிக்கு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட நான்குசக்கர வாகனத்துடன் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து ஜாமினில் விடுவித்தார். நான்கு சக்கரவாகனத்தை 09.06.2021 தேதி மோட்டர் வாகன ஆய்வாளர் இளங்கோ அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி 12.06.2021 தேதி ஆய்வறிக்கை பெற்று ஆய்வறிக்கை பதிவு செய்தார். அதே தேதியில் விபத்து பதிவேடு பதிவு செய்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் ரம்யா மற்றும் பிரேதபரிசோதனை செய்த

மருத்துவர் மேரி செலிஸ்டினா ஆகியோர்களை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றார். பின்னர் இவ்வழக்கின் விசாரனையை முடித்து 279, 304 (A) of IPC யின் படி இறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ. 1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் இறந்த சித்ரா என்பவரின் மகன் மணிகண்டன் என்பவர் அ.சா.1 ஆக விசரிக்கப்பட்டு அவர்மூலம் புகார் மனு அளிக்கப்பட்டு அதில் உள்ள அ.சா.1ன் சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 ஜீவானந்தம் மற்றும் அ.சா.3 யோகராஜன் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார். சம்பவ இட சாட்சிகளாக அ.சா.4 மயில்சாமி மற்றும் அ.சா.5 லெட்சுமண மணிகண்டன் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு, பார்வை மகஜர் அ.தசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் ஜெய்கணேஷ் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி பார்த்திபன் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8ன் மூலம் புகார் அ.த.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகவும், விபத்து பதிவேடு அ.த,சா.ஆ.7 ஆகவும் பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகவும்,

மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சிகளான மோட்டார் வாகன ஆய்வாளர் இளங்கோ மற்றும் மருத்துவர் ரம்யா, மருத்துவர் மேரி செலஸ்டினா மற்றும் தங்கபாண்டி ஆகிய சாட்சிகள் அரசு தரப்பு வழக்கறிஞர் மூலம் விலக்களிப்பு செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சியம் அ.சா.1 முதல் அ.சா.8 உடன் முடித்துக்கொள்ளப்பட்டு, அரசு தரப்பு சாட்சியின் சாட்சியத்திலிருந்து இருந்து எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து, கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவுன் படி வினவியபோது, எதிரி அவைகளை மறுத்து, பொய் சாட்சியம் என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி சித்ரா என்பவர் இறப்பை ஏற்படுத்தியுள்ளார் எனவும், சாட்சியங்கள் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது. மேலும் எதிரி தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் சம்பவ இடத்தில் இல்லை எனவும் புகார் மற்றும் புகாரை அளித்த பட்டியல் சாட்சி 1ன் வாக்குமூலத்திலும் அவ்வாறான சங்கதிகள் காணப்படவில்லை எனவும் வழக்கிற்காக சம்பவ இடத்தில் இருந்ததாக சாட்சியமளித்துள்ளனர் எனவும், குழந்தை ரோட்டிற்கு மறுபுறம் யாரும் இன்றி இருந்த போது விபத்தில் இறந்த நபர் கவனக்குறைவாக ரோட்டைக்

கடக்கும் போது விபத்து ஏற்பட்டுள்ளது எனவும், எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் எந்த ஒரு சேதாரமும் இல்லை எனவும், அதனால் விபத்து ஏற்படவில்லை எனவும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை எனவும் வாதிடப்பட்டுள்ளது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்வுக்குரிய பிரச்சனை**

அரசு தரப்பில் எதிரி மீது பிரிவு 279, 304(A) இ.த.ச– ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதுவேயாகும்.

8. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) ன் கீழான குற்றச்சார்த்துகள் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இவ்வழக்கின் அடிப்படை ஆவணமான அ.த.சா.ஆ.1 புகார் மனு பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. புகாரில் " கடந்த 17.05.2021 ம் தேதி இரவு 8.40 க்கு புகார்தாரர் கிருஷ்ணன் தனது வீட்டின் முன்பாக தனது மனைவியுடன் நின்று கொண்டிருந்த சமயத்தில் தனது பேரன் ரோட்டிற்கு தெற்கு திசையில் நின்று விளையாடிக் கொண்டிருந்துள்ளார். தனது பேரனை தூக்க செல்வதற்காக தனது மனைவி ரோட்டின் வடக்கு பக்கமாக நின்று இரண்டு திசையிலும் வாகனம் ஏதும் வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்த போது அப்பொழுது TN 57 9657 என்ற பொலிரோ பிக்கப் வண்டி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓவர் ஸ்பீடில் ஹாரன் அடிக்காமல், ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த தனது

மனைவி மீது மோதி சித்ராவின் தலை வண்டியின் பின்சக்கரத்தில் சிக்கியிருந்தது என்றும், பிறகு வண்டியை பின்புறம் நகற்றி தனது மனைவியை தூக்கி பார்த்தபோது தலையில் பலத்த ரத்தக்காயத்துடன் மூச்சுப் பேச்சு இல்லாமல் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார். " என சம்பவம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

9. அ.சா.1 தனது முதல் சாட்சியத்தில் " நான் திண்டுக்கல் பித்தளைப்பட்டியில் குடியிருந்து ஹாலோபிளாக் கம்பெனி வைத்துள்ளேன். பட்டில் சாட்சி 1 கிருஷ்ணன் எனது அப்பா. அவர் தற்போது இறந்துவிட்டார். இவ்வழக்கு விபத்தில் இறந்த சித்ரா எனது அம்மா. எனது வீடு பித்தளைப்பட்டியில் கிழமேல் ரோட்டிற்கு வடக்கே உள்ளது. எனது வீடு தெற்கு பார்த்த வாசல் உள்ள வீடாகும். 17.05.2021ம் தேதி இரவு 8.40 மணி இருக்கும். எனது வீட்டின் முன்பாக நான், எனது அம்மா சித்ரா, எனது அப்பா கிருஷ்ணன், என் மனைவி ரூபாதேவி, எனது நண்பர் யோகராஜ் ஆகியோர்கள் எனது வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தோம். எனது மகன் ரோட்டிற்கு தெற்கு திசையில் நின்று விளையாடிக் கொண்டிருந்தார். எனது மகனை தூக்க செல்வதற்காக எனது அம்மா ரோட்டின் வடக்கு பக்கமாக நின்று இரண்டு திசையிலும் வாகனம் ஏதும் வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது TN 57 9657 என்ற பொலிரோ பிக்கப் வண்டி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓவர் ஸ்பீடில் ஹாரன் அடிக்காமல், ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த எனது அம்மா மீது மோதி, எனது அம்மாவை 10 அடி தூரம் இழுத்துச் சென்றது. அதில் எனது அம்மாவின் தலை பிக்கப் வண்டியின்

பின்பக்கம் உள்ள இடது பக்க டயரில் சிக்கிவிட்டது. ஆஜர் எதிரி சுப்பையாதான் அந்த வண்டியை ஓட்டிய நபர் ஆவார். அவர் வண்டியை நிறுத்திவிட்டார். நாங்கள் எனது அம்மாவை தூக்கிப் பார்த்தோம். அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக சொன்னார். அதன்பின்னர் எனது அம்மாவின் பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்துவிட்டு இதுசம்மந்தமாக திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரை நான்தான் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்." என சாட்சியமளித்துள்ளார். மேலும் **அ.சா.1 தனது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்** " புகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் எனது தந்தை கொடுத்தார் என்றால் சரிதான். புகாரில் எனது தகப்பனார் நானும், எனது மனைவியும் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தோம் என்றுதான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் நானும் எனது மனைவியும் அங்குதான் இருந்தோம். எனது அப்பா கொடுத்த புகாரிலும் என்னுடைய 161 வாக்குமூலத்திலும் என்னுடைய குழந்தை ரோட்டிற்கு தெற்கு பக்கம் விளையாடிக் கொண்டிருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில் உள்ள ரோட்டின் மேல் எனது அம்மாவும், அப்பாவும் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். பித்தளைப்பட்டி ரோட்டில் வேகத்தடைகள் ஆங்காங்கே

அமைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. எனது குழந்தைக்கு 3 வயது இருக்குமா என்றால் 2 வயது. எனது குழந்தை ரோட்டிற்கு தெற்கு பக்கம் விளையாடிக் கொண்டிருந்தபோது எனது குழந்தைக்கு பாதுகாப்பாக எனது பெற்றோரும், வேறுயாரும் இருந்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன் எதிரியை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். ரோட்டில் வாகனங்கள் வரும்போது ஹாரன் அடிக்கும்போது குழந்தை பயத்தில் ஓட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனம் 8–10 அடி ரோட்டில் எவ்வளவு வேகத்தில் வந்தது என்று புகாரில் எனது தகப்பனார் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தனது பேரக்குழந்தை வாகனம் மோதி விபத்து ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில் எனது அம்மா சாலை விதிகளை மதிக்காமல் அஜாக்கிரதையாக ரோட்டைக் கடந்ததால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. எனது அம்மா ஓரமாக நின்றுகொண்டுதான் இருந்தார். " என குறிப்பிடப்பட்டுள்ளது.

10. அ.சா.2 ஜீவானந்தம் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " நான் திண்டுக்கல் பித்தளைப்பட்டியில் குடியிருந்து டிரைவிங் ஸ்கூல் டீச்சர் வேலை செய்து வருகிறேன். பட்டில் சாட்சி 1 கிருஷ்ணன் எனக்குத் தெரியும். அவர் எனது உறவினர். அவர் எனது எதிர் வீட்டைச் சேர்ந்தவர். இவ்வழக்கு விபத்தில் இறந்த சித்ராவைத் தெரியும். கடந்த 17.05.2021ம் தேதி லாக்டவுன் சமயம் இரவு 8.30 மணியிலிருந்து 8.40 மணி இருக்கும் அப்போது மணிகண்டனின் மகன் எனது வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்தான். அவனை தூக்குவதற்காக சித்ரா ரோட்டின் வடக்கு

பக்கம் ஓரமாக நின்று கொண்டிருந்தார். அப்போது மேற்கிலிருந்து கிழக்குநோக்கி பிக்கப் வண்டி வேகமாக வந்தது. ரோட்டின் வடக்கு பக்கமாக நின்று கொண்டிருந்த சித்ரா மீது பிக்கப் வண்டி ஏறிச் சென்று சித்ரா மீது மோதி சிறிதுதூரம் தள்ளிச் சென்று நின்றது. அந்த சம்பவத்தில் சித்ராவின் தலை வண்டிக்கு அடியில் பேட்டரி பாக்ஸ்க்கும் டயருக்கும் இடையே சிக்கிவிட்டது. இதைப்பார்த்த நாங்கள் சித்ராவை தூக்கச் சென்றோம். சித்ரா பேச்சு மூச்சு இன்றி இருந்தார். ஆஜர் எதிரிதான் அந்த வண்டியை ஓட்டிய நபர் ஆவார். சித்ராவை நாங்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள் " என சாட்சியமளித்துள்ளார். **மேலும் அ.சா.2 தனது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்** " அ.சா.1 மணிகண்டன் எனது உறவினர் என்றால் தம்பி. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் டிரைவிங் ஸ்கூல் டீச்சர். என்னுடைய பணி நேரம் என்ன என்றால் அந்த சமயத்தில் லாக்டவுன் என்பதால் நான் வீட்டில்தான் இருந்தேன். என்னுடைய வீட்டிற்கும், விபத்து நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ரோட்டைக் கடந்தால் எனது வீடு. நான் டமார் என்று சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன் என்றால் விளையாடிக் கொண்டிருந்த தம்பியுடன் நானும் நின்று கொண்டிருந்தேன். இறந்துபோனதாக சொல்லப்படும் நபர் எனக்கு என்ன உறவு என்றால் சித்தி முறை. நான் விபத்தை நேரடியாகப் பார்கவில்லை என்றாலும், அ.சா.1 மணிகண்டன் கேட்டுக் கொண்டதற்கிணங்க விபத்தை நேரில் பார்த்தாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல." என குறிப்பிடப்பட்டுள்ளது.

11. அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் திண்டுக்கல் பித்தளைப்பட்டியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். பட்டில் சாட்சி 1 கிருஷ்ணன் எனக்குத் தெரியும். அவர் எனது நண்பர் மணிகண்டனின் அப்பா. வழக்கு விபத்தில் இறந்த சித்ராவைத் தெரியும். கடந்த 17.05.2021ம் தேதி நான் இரவு 8.40 மணிக்கு மணிகண்டன் வீட்டின் முன்பாக நின்று பேசிக் கொண்டிருந்தேன். அப்போது நான், மணிகண்டன், மணிகண்டன் மனைவி, அம்மா, அப்பா ஆகியோர்கள் இருந்தோம். அப்போது மணிகண்டனின் மகன் ரோட்டின் தெற்கு பக்கமாக விளையாடிக் கொண்டு இருந்தான். அந்த பையனை கூப்பிடுவதற்காக சித்ரா அவர் வீட்டின் முன்பாக நின்று ரோட்டின் இருபுறமும் பார்த்துக்கொண்டு இருந்தார் அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓவர் ஸ்பீடில் வந்த பிக்கப் வண்டி சித்ராவின் மீது இடித்துவிட்டது. பிக்கப் வண்டியின் பின் பக்க Left Side டயரில் சித்ராவின் தலை சிக்கிவிட்டது. வண்டி 10 அடி தள்ளிச் சென்று நின்றது. நாங்கள் சித்ராவை தூக்கிப் பார்த்தபோது மூச்சுபேச்சு இன்றி இருந்தார். ஆஜர் எதிரிதான் அந்த பிக்கப் வண்டியை ஓட்டிய நபர் ஆவார். அதன் பின்னர் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். " என சாட்சியமளித்துள்ளார். **மேலும் அ.சா.3 தனது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்** " அ.சா.1 மணிகண்டன் எனது உறவினர் என்றால் நண்பர். மணிகண்டனின் அப்பா கொடுத்த புகாரில் நானும், மணிகண்டனும், ஜீவானந்தம் ஆகியோர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாகக் கூறி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். " என குறிப்பிடப்பட்டுள்ளது.

12. அ.சா.7 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " நான் திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 17.05.2021 ம் தேதி இரவு 22.30 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருக்கும் போது திண்டுக்கல் பித்தளைப்பட்டியை சேர்ந்த அழகுமலைப்பிள்ளை அவரின் மகன் கிருஷ்ணன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப திண்டுக்கல் தாலுகா குற்ற எண் 560/2021 பிரிவு 279,304(A) இ.த.ச. படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் மனு அசலையும் , இணைத்து நீதிமன்றத்திற்கும் மற்ற நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கும் காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க வழக்கு பதிவு செய்த விவரத்தை கூறினேன் " என சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.7 ன் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில் " புகார்தரார் கொடுத்த புகார் ஆனது யாரால் எங்கு வைத்து எழுதப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது. அதைபோல் அ.சா.1, அ.சா.2,அ.சா.3 ஆகியவர்கள் விபத்து சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் நேரில் இருந்ததாக முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். " என குறிப்பிடப்பட்டுள்ளது.

13. அ.சா.8 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " கடந்த 17.05.2021 தேதி திண்டுக்கல் தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் பொறுப்பு அலுவலில்

இருந்த போது சார்ப்பு ஆய்வளர் திரு.ஜெய்கனேஷ் அவர்களால் பதிவு செய்யப்பட்டிருந்த நிலைய குற்ற எண்.560/2021 U/s.279, 304(A) of IPC வழக்கினை எனது புலன் விசாரனைக்கு எடுத்துக் கொண்டேன். 18.05.2021 தேதி அதிகாலை 00.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான திண்டுக்கல் பித்தளைப்பட்டி புங்கமரத்தெரு மெயின் ரோடு சென்று சாட்சிகள் மயில்சாமி மற்றும் லட்சுமணமணிகண்டன் ஆகிய இருவரின் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகள் கிருஷ்ணன் மணிகன்டன், ஜீவாநந்தம், யோகராஜன், மயில்சாமி, லட்சுமனமணிகன்டன் ஆகிய சாட்சிகளை விசாரனைசெய்து மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். அதே தேதியில் திண்டுக்கல் அரசு மருத்துவமணை சவக்கிடங்கு சென்றும் இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்து போன சித்ரா என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரனையில் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 6 மணி முதல் 7.30 மணிவரை பிரேத விசாரனை மேற்கொண்டேன். இந்த இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பெண் முதல் நிலைக் காவலர் 657 திருமதி . தங்கப்பாண்டி என்பவர் மூலம் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தினை கொடுத்து அனுப்பினேன். அதே தேதியில் பெண் முதல் நிலைக் காவலர் 657 திருமதி . தங்கப்பாண்டி மற்றும் சார்பு ஆய்வளர் ஜெய்கனேஷ் ஆகியோர்களை விசாரனை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன், பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் 19.05.2021 தேதி 12.30 மணிக்கு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட நான்குசக்கர வாகனத்துடன் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து

தக்க ஜாமினில் விடுவித்தேன். நான்கு சக்கரவாகனத்தை 09.06.2021 தேதி மோட்டர் வாகன ஆய்வாளர் இளங்கோ அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி 12.06.2021 தேதி ஆய்வறிக்கை பெற்று ஆய்வறிக்கை பதிவு செய்தேன். அதே தேதியில் விபத்து பதிவேடு பதிவு செய்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் ரம்யா மற்றும் பிரேதபரிசோதனை செய்த மருத்துவர் மேரி செலிஸ்டினா ஆகியோர்களை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் இவ்வழக்கின் விசாரனையை முடித்து 279, 304 (A) of IPC யின் படி இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன் " என சாட்சியமளித்துள்ளார். **மேலும் அ.சா.8 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்** " புகாரில் சம்பவ இட சாட்சிகளான மணிகண்டன், ஜீவானந்தம் , யோகராஜ் ஆகியவர்கள் விபத்து நடந்த இடத்தில் இருந்ததாகவும், நேரில் பார்த்ததாகவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பெயர் குறிப்படாமல் குறிப்பிட்டுள்ளார்கள். மோட்டர் வாகன ஆய்வளர் வழங்கிய ஆய்வறிக்கையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் எந்த ஒரு டேமேஜ் இல்லை என வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலம் 14 சேதம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் 12 என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Dameges could not be accessed என குறிப்பிடப்பட்டுள்ளது. சேதங்களை அனுமானிக்க முடியாது என குறிப்படப்பட்டுள்ளது. சேதங்கள் இல்லை என குறிப்படவில்லை. மோட்டார் வாகன அறிக்கையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் என்ன என்ன டேமேஜ்கள் ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்வார்கள் என்றாலும் அது போன்று இந்த அறிக்கையில்

குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. பிரேத விசாரனை சாட்சிகளான வெள்ளைசாமி, தினேஷ், ஜெயராமன், அசோக்குமார், யோகராஜ் ஆகியோர்களை சாட்சிகளாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவ இடத்தை சேர்ந்தவர்களை யாரையும் சாட்சிகளாக விசாரிக்கவும் இல்லை சேர்க்கவும் இல்லை என்றால் சரியல்ல. வரைபட சாட்சிகள் சம்பவ இடத்தை சேர்ந்தவர்கள் போதுமான சாட்சிகள் இருந்ததால் மற்றவர்களை விசாரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. நான் சொன்னவாறு சொன்ன இடத்தில் எந்த விசாரனையும் மேற்கொள்ளவில்லை என்றாலும் நான் வழக்கின் ஆவணங்களை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் அ.சா.1, அ.சா.2. அ.சா.3, இல்லை என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் புகாரில் குறிப்பிட்டு சொல்லியிருப்பார்கள் என்றாலும் சரியல்ல. இறந்து போன சித்ராவின் பேரன் சந்தோஷ் ரோட்டின் தெற்கு பகுதியில் யாருடைய பராமரிப்பிலும் கண்கானிப்பிலும் விளையாடிக்கொண்டிருந்தார் என புகார் மற்றும் போலிஸ் விசாரனையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன சித்ரா என்பவரின் கணவர் பட்டியல் சாட்சி 1 கிருஷ்ணன் என்பவருக்கு காயம் ஏதுவும் இந்த விபத்தில் ஏற்படவில்லை என்றால் சரிதான் " என குறிப்பிடப்பட்டுள்ளது.

14. சம்பவ இட சாட்சிகளான அ.சா.4 மயில்சாமி மற்றும் அ.சா.5 லெட்சுமண மணிகண்டன் ஆகியோர் சம்பவ இடம் குறித்து சாட்சியமளித்துள்ளனர். அ.சா.6 ராஜேஷ்குமார் வழக்கினை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என பிறழ்சாட்சியமளித்துள்ளார். அ.சா.6 ன் அரசு தரப்பு குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்புக்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் வெளிக்கொண்டு வரப்படவில்லை.

15. அசா.1 மணிகண்டன், அ.சா.2 ஜீவானந்தம் மற்றும் அ.சா.3 யோகராஜன் இறந்து போன சித்ராவின் விபத்து குறித்து கண்ணுற்ற சாட்சிகளாக சாட்சியமளித்துள்ளனர். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கையில் அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு TN 57 BC 9765 Bolero Pickup Van –யை அதன் ஓட்டுநரான சுப்பையா என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து சித்ரா மீது மோதியதால் ஏற்பட்ட வாகன விபத்தில் சித்ராவுக்கு தலை மற்றும் உடலில் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே சித்ரா மரணமடைந்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி– 1 வழக்கு விசாரணையின் போது இறந்துவிட்டபடியால் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.3 ன் சாட்சியத்தில் அ.சா.1 ன் மனைவி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவரும் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. மேலும் அடிப்படை ஆவணமான புகார் மற்றும் புகாரை அளித்த பட்டியல் சாட்சி 1 ன் வாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலினை செய்து பார்க்கையில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் சம்பவ

இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. தாய் தந்தை தாத்தா பாட்டி ஆகியோர் ரோட்டின் ஒருபுறம் இருந்ததாகவும், 2 வயது குழந்தை ரோட்டின் மறுபுறமும் விளையாடிக் கொண்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தையுடன் ரோட்டின் மறு ஓரத்தில் யார் இருந்தார்கள் அல்லது குழந்தை யாருடன் யார் பாதுகாப்பில் விளையாடிக்கொண்டிருந்தது என்பது பற்றியான சங்கதிகள் விளக்கப்படவில்லை. அ.சா.7 மற்றும் அ.சா.8 ன் குறுக்கு விசாரணையின் போது புகாரில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என முன்நிறுத்தப்பட்டு மறுக்கப்படவில்லை. எனவே அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் சம்பவ இடத்தில் தான் இருந்தார்களா என்பதில் சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் சம்பவ இடத்தில் இல்லை, அவர்களது சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே உள்ளது. மேலும் வாகனத்தின் சேதங்கள் குறித்து அ.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. எனவே அவர்களது சாட்சியத்தின் அடிப்படையில் எதிரியின் கவனக் குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழும் சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. முடிவாக எதிரியை பிரிவு 279, 304(A) இ.த.ச.–ன் கீழான குற்றச்சார்த்துகள் எதுவும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி இ.த.ச.

பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 255(1) ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜீன் 03 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்புரை என்னால் பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.03 16:32:00 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

**பிற்சேர்க்கை**

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1. திரு. மணிகண்டன்

அ.சா.2. திரு. ஜீவானந்தம்

அ.சா.3. திரு. யோகராஜன்

அ.சா.4. திரு. மயில்சாமி

அ.சா.5. திரு. லெட்சுமண மணிகண்டன்

அ.சா.6. திரு. ராஜேஷ்குமார்

அ.சா.7. திரு. ஜெய்கணேஷ், சார்பு ஆய்வாளர்

அ.சா.8. திரு. பார்த்திபன், ஆய்வாளர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவணம் |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1. | 17.05.2021 | புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2. | 18.05.2021 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3. | 17.05.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4. | 17.05.2021 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.5. | 18.05.2021 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.6. | 18.06.2021 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.7. | 17.05.2021 | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.8 | 18.05.2021 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.த.சா.ஆ.9 | 09.06.2021 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் – இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.03 16:32:08 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**

**திண்டுக்கல்.**

**குறிப்பு–**

1. இந்த வழக்கில் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இந்த வழக்கில் சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை.